# SOUTH EASTERN UNIVERITY OF SRI LANKA
# SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007
# HELD IN MAY - 2007

## ECS 2.15 – FUNDAMENTALS OF FINANCIAL ACCOUNTING

**எல்லா வினாக்களுக்கு விடையளிக்குக.**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) பேரேட்டுக் கணக்குகளை வகைப்படுத்தி அவற்றிற்கான கணக்குப் பதிவுகளைத் தருக. (4 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை அதற்குரிய பேரேட்டுக் கணக்குகளில் பதிவுசெய்து, அவற்றைச் சமப்படுத்தி பரீட்சை மீதியை தயாரிக்குக.

2006.04.01 மோகன் வியாபாரத்தில் 150,000 ரூபா முதலீடு செய்தார்

2006.04.02 ரூபா 35,000 பெறுமதியான பொருட்கள் Y இடம் கொள்வனவு செய்யப்பட்டது.

2006.04.04 ரூபா 10,000 க்கு சரக்குகள் விற்பனை செய்யப்பட்டன.

2006.04.04 ரூபா 12,000 க்கு X இற்கு சரக்குகள் விற்பனை செய்யப்பட்டன.

2006.04.05 உடைமையாளர் பற்றிய சரக்குகள் ரூபா 2000 ஆகும்.

2006.04.06 உடைமையாளர் ரூபா 150,000 இனை மேலதிகமாக முதலீடு செய்தார்.

2006.04.07 தனது உறவினர் Z இடம் ரூபா 25,000 கடன் பெற்றார்.

2006.04.08 ரூபா 10,000 இற்கு சரக்குகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன், மோட்டார் வாகனம் ரூபா 50,000 க்க வாங்கப்பட்டது.

2006.04.12 காரியாலய உபகரணம் அகமட் கம்பனியிடம் ரூபா 40,000 க்கு வாங்கப்பட்டது.

2006.04.14 உறவினர் Z இடம் வாங்கிய கடனின் ஒரு பகுதியாக ரூபா 10,000 திருப்பிக் கொடுக்கப்பட்டது.

2006.04.16 உடைமையாளர் ரூபா 1000 ஐ தனது தேவைக்காக பற்றினார்.

2006.04.18 சொந்தப் பணத்தின் மூலம் Y க்கு கொடுக்க வேண்டிய தொகையில் ரூபா 5,000 கொடுக்கப்பட்டது.

2006.04.20 சரக்குகள் ரூபா 10,000 க்கு Y இடம் கொள்வனவு செய்யப்பட்டது.

2006.04.24 Y க்கு ரூபா 5,000 செலுத்தினார்.

(16 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) சில்லறைக் காசேடு என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(ஆ) வில்லியம் சில்லறை வியாபாரத்தின் 2006 மார்ச் 01 இல் வங்கி மீதி ரூபா 18,000 ஆகவும் காசு மீதி ரூபா 16,500 ஆகவும் இருந்தது.

மார்ச் மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு இருந்தது.

மார்ச் 02 – விற்பனை ரூபா 1000

03 – காசோலை மூலமான கொள்வனவு ரூபா 1200

04 – கடன்பட்டவரான கணேசனிடம் ரூபா 490 பெறப்பட்டது. கழிவு 2%

06 – ஆதம் தரவேண்டிய 700 ரூபாவுக்குப் பதிலாக ரூபா 650 பெறப்பட்டது. கழிவு ரூபா 50.

08 – மின்சாரப் பட்டியலுக்கு ரூபா 300 பெறுமதியான காசோலை செலுத்தப்பட்டது.

09 – விற்பனையால் ரூபா 2000 காசோலையாகப் பெறப்பட்டு, அக்காசோலையுடன் ரூபா 500 சேர்த்து வங்கியிலிடப்பட்டது.

10 – பெரேராவுக்கு கொடுக்கவேண்டிய ரூபா 2000 கடன் தீர்க்கப்பட்டபோது 10 % கழிவு கிடைத்தது.

11 – மோகனுக்கு ரூபா 285 செலுத்தப்பட்டது. ஆவர் 5 % கழிவை அனுமதித்தார்.

12 – ஊழியர் சம்பளம் ரூபா 3000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

15 - மூசா தரவேண்டிய 3000 ரூபாவில் ரூபா 2950 பெற்றுக்கொண்டு கடன் பதிவழிக்கப்பட்டது.

17 – காசு விற்பனை ரூபா 4000

18 – வங்கியிலிடப்பட்ட காசு ரூபா 6000

20 – வங்கியால் வங்கி மேலதிகப் பற்று ரூபா 55,000 அனுமதிக்கப்பட்டதுடன் இயந்திரமொன்று ரூபா 48,000 க்கு வாங்கப்பட்டு அதற்கு காசோலை பிறப்பிக்கப்பட்டது.

21 – வங்கியிலிருந்து 4000 ரூபா மீளப் பெறப்பட்டது.

மேற்படி கொடுக்கல் வாங்கல்களை மூன்று நிரல் காசேட்டில் பதிவுசெய்வதுடன் அந்தந்தப் பேரேட்டுக் கணக்குக்கு மாற்றுக.

(16 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) வங்கிக் கணக்குக்கும் வங்கிக் கூற்றுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(4 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் தரவுகளிலிருந்து வங்கிக் கணிணக்கக் கூற்றைத் தயாரித்து 31 டிசம்பர் 2005 இல் உள்ளபடியான காசேட்டு மீதியைக் காட்டுக.

(i) பின்வரும் காசோலைகள் டிசம்பர் 2005 இல் வைப்பிலடப்பட்டபோதும் அவை ஜனவரி 2006 இல் வங்கியில் செலவு வைக்கப்பட்டன.
மதன் ரூபா 700, குலாம் ரூபா 800, அஸீஸ் ரூபா 600

(ii) பின்வரும் காசோலைகள் டிசம்பர் 2005 இல் நிறுவனத்தினால் வழங்கப்பட்டும் அவை ஜனவரி 2006 இல்தான் வங்கியில் மாற்றப்பட்டன.
றசாக் ரூபா 500, கலீல் ரூபா 450

(iii) பின்வரும் கட்டணங்கள் வங்கியினால் அறவிடப்பட்டபோதும் அவை நிறுவனக் காசுப் புத்தகத்தில் பதியப்படவில்லை.
31 டிசம்பர் 2005 முடிவடையும் அரைவருடக் கட்டணம் ரூபா 20, நிலுவைக் காசோலைகள் அறவிடும் கட்டணம் ரூபா 15.

(iv) நிலையான உத்தரவின் பேரில் வங்கியினால் செலுத்தப்பட்ட பின்வரும் தொகைகள் காசுப் புத்தகத்தில் பதியப்படவில்லை.
காப்புறுதிக் கட்டணம் ரூபா 350, சந்தாக் கட்டணம் ரூபா 75.

(v) வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 500 பெறுமதியான காசோலையொன்று டிசம்பர் 2005 இல் காசுப் புத்தகத்தில் பதியப்பட்டது. ஆனால் டிசம்பர் 2005 இல் வங்கியிலிட தவறப்பட்டது.

(vi) ரூபா 1000 பெறுமதியான மாற்றுண்டியல் ஒன்று வங்கியினால் ரூபா 20 கழிவுடன் இளப்பாறப்பட்டது. ஆனால், மாற்றுண்டியலின் முழுத் தொகையும் காசுப் புத்தகத்தின் வங்கி நிரலில் செலவு வைக்கப்பட்டது.

31 டிசம்பர் 2005 இன் படி காசுப் புத்தக வங்கி நிரலின் படி மீதி ரூபா 15,800 ஆகவிருந்தது.

(16 புள்ளிகள்)

04. (அ) கணக்கீட்டு நியமம் 18 இன்படி நிதிக்கூற்றைத் தயாரிக்கும்போது பெறுமானத்தேய்வு தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியவற்றை சுருக்கமாக எடுத்துக் கூறுக.

(4 புள்ளிகள்)

(ஆ) மாதவன் உற்பத்தி நிறுவனம் 2005 ம் ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| இருப்பு 1.1.2005 இல் உள்ளபடி | ரூபா |
| மூலப்பொருள் | 5,000 |
| முடிவுறாத வேலை (தொழிற்சாலைச் செலவில்) | 3,000 |
| முடிவுற்ற இருப்பு | 9,000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 90,000 |
| மூலப்பொருள் கொண்டுவரல் கூலி | 1,500 |
| உற்பத்திக் கூலி (நேர்) | 40,000 |
| உற்பத்திக் கூலி (நேரில்) | 30,000 |
| நேர்ச்செலவு | 15,000 |
| வுடகை வரி – தொழிற்சாலை | 12,000 |
| வாடகை வரி – காரியாலயம் | 15,000 |
| காப்புறுதி – தொழிற்சாலை | 3,000 |
| காப்புறுதி – காரியாலயம் | 2,400 |
| மின்சாரம் - தொழிற்சாலை | 3,500 |
| மின்சாரம் - காரியாலயம் | 1,425 |
| எரிபொருள் - தொழிற்சாலை | 4,000 |
| நானாவிதச் செலவு – தொழிற்சாலை | 2,500 |
| நானாவிதச் செலவு – காரியாலயம் | 1,200 |
| விற்பனை | 250,000 |
| விற்பனைத் தரகு | 10,000 |
| விளம்பரச் செலவு | 15,000 |
| ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு | |
| இயந்திரம் உபகரணம் | 15,000 |
| காரியாலய தளபாடம் | 2,000 |
| விநியோக வாகனம் | 3,000 |
| இருப்பு 31.12.2005 இல் உள்ளவாறு | |
| மூலப்பொருள் | 14,000 |
| முடிவுறாத வேலை (தொழிற்சாலை செலவில்) | 9,000 |
| முடிவுற்ற பொருள் | 40,000 |

நீர் செய்யவேண்டியது –

31.12.2005 இல் முடிவடைந்த ஆண்டுக்கான

(i) உற்பத்திக் கணக்கு

(ii) வியாபார இலாபநட்டக் கணக்கு

(16 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. ரசீட் வியாபாரத்தின் 31.12.2004 இல் காணப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| இருப்பு 31.12.2004 இல் | 5,000 |
| கடன்பட்டோர் | 3,600 |
| கடன்கொடுத்தோர் | 3,000 |
| கொடுக்கவேண்டிய செலவு | 2,000 |
| முற்பணமாகப் பெற்றிருந்த வருமானங்கள் | 1,000 |
| காணி கிரயம் | 500,000 |
| 31.12.2004 இல் பெறுமதி | 150,000 |
| மோட்டார் கிரயம் | 200,000 |
| 31.12.2004 இல் பெறுமதி | 150,000 |
| தளபாடம் | 50,000 |
| 31.12.2004 இல் பெறுமதி | 40,000 |
| பெற்ற ஈட்டுக் கடன் | 120,000 |
| பெறவேண்டிய வருமானம் | 5,000 |
| வங்கி மீதி | 15,000 |
| காசு மீதி | 4,000 |
| பற்று | 10,000 |
| மூலதனம் | 581,600 |
| 2004 ம் ஆண்டின் தேறிய இலாபம் | 25,000 |

31.12.2004 இல் உள்ளபடியான ஐந்தொகையை தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்

(16 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(ஆ) அமீர் வியாபார நிறுவனத்தின் இயந்திர உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு

| இயந்திர இலக்கம் | கொள்வனவுத் திகதி | கிரயம் ரூபா | விற்பனைத் திகதி | விற்பனைப் பெறுமதி |
|---|---|---|---|---|
| 1 | 31.03.1998 | 80,000 | 01.07.2002 | 55,000 |
| 2 | 01.07.1999 | 50,000 | - | - |
| 3 | 31.06.2000 | 100,000 | 01.04.2002 | 85,000 |
| 4 | 01.10.2001 | 70,000 | - | - |

நிறுவனத்தின் இயந்திர உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையில் 10 % தேய்விடப்படுகின்றது.

01.01.1998 இலிருந்து 31.12.2002 வரையான காலத்திற்கு அமீரின் ஏடுகளில் பின்வரும் கணக்குகளைக் காட்டுக.

(i) இயந்திரக் கணக்கு

(ii) இயந்திர தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு

(iii) பெறுமானத் தேய்வுக் கணக்கு

(iv) இயந்திர விற்பனைக் கணக்கு

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

****